செ.வெ.எண்.19/நவம்பர் நாள் :12.11.2019

**பத்திரிகை செய்தி**

தருமபுரி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகிற்கு ஒப்பந்த அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக கீழ்க்கண்ட பணியிடத்துக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு - தருமபுரி மாவட்டத்தை சார்ந்த தகுதியான நபர்கள் உடன் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் தகவல்.

தருமபுரி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகிற்கு கீழ்கண்ட காலிப்பணியிடங்கள் **1 வருட ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட உள்ளனர்.** இதில் தேர்வு செய்யப்படும் பணியாளருக்கு **கீழ்கண்ட** பதவிக்கேற்ப அரசு அறிவித்துள்ள தொகுப்பூதியம் வழங்கப்படும்.

நிரப்பப்படவுள்ள காலிப்பணியிடம் மற்றும் தொகுப்பூதியம்

| | | | |
|---|---|---|---|
| 1. | உதவியாளர் மற்றும் கணிணி இயக்குபவர் (Assistant cum Data Entry Operator) | - | 1 பதவி தொகுப்பூதியம் ரூ.10,000/- ஒரு மாதத்திற்கு |

**வயது, கல்வித் தகுதி மற்றும் அனுபவம்**

1. உதவியாளர் மற்றும் கணிணி இயக்குபவர்

10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும், அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் கணிணி கல்வியில் பட்டயப்பயிற்சி (Diploma in Computer Application) மற்றும் கணிணி இயக்குவதில் 1 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும். 40 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் கூடாது.

மேற்கண்ட பதவிகளுக்கான தகுதியுள்ள விண்ணப்பங்கள் புகைப்படத்துடன் (Passport Size) 27.11.2019 மாலை 5.45 மணிக்குள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், தருமபுரி என்ற முகவரியில் வந்து சேரும் வகையில் அனுப்பப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**